**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.120/2021**

**Deposition of PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராம்கி | **Age** | : | 34/2026 |
| **Father's Name** | : | திரு. முருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | தர்மத்துப்பட்டி | **Calling** | : | டிரைவர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/06/2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண் 1175/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. தர்மத்துபட்டியில் நான் எத்தனை வருடங்களாக பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறேன் என்றால் நான் நடத்தி வரவில்லை எதிரிதான் நடத்தி வருகிறார். எதிரி எத்தனை வருடங்களாக பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் 2 வருட பழக்கம் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். எதிரி காசோலையை டிசம்பர் மாதம் 10ஆம் தேதி 2019 ஆம் வருடம் கொடுத்தார் கிழமை ஞாபகம் இல்லை.

3. எதிரி காசோலையை பெட்ரோல் பங்கில் வைத்து கொடுத்தார். எதிரி காசோலையை என்னிடம் கொடுத்த போது நானும் எனது தம்பியும் இருந்தோம். எனது உடன்பிறந்த தம்பியின் பெயர் அன்பு என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்த போது எனது வீட்டில் நானும் எனது அப்பாவும் எதிரியும்

இருந்தோம். எதிரிக்கு பணமாகத்தான் கொடுத்தேன். நான் மொத்தமாக மூன்று லட்சம் ரூபாய் பணமாகத்தான் கொடுத்தேன்.

4. எதிரி என்னிடம் ரூபாய் ஒரு லட்சம் பணம் வாங்கினார் என்றும் நான் மூன்று லட்சம் தொகை நிரப்பி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல காசோலையை எதிரிதான் நிரப்பி கொடுத்தார். எனது மகனுக்கு விசேஷம் வைத்திருந்தேன் அதில் எனக்கு 15 லட்சம் பணம் வந்தது அதிலிருந்து தான் எதிரிக்கு மூன்று லட்சம் பணம் கொடுத்தேன் இந்த விபரத்தை நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

5. எனது மகனுக்கு விசேஷம் வைத்து அதன் மூலமாக கிடைத்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். எதிரி எனது தம்பியிடம்தான் ஒரு லட்சம் தான் பணம் வாங்கியதாகவும் 3 லட்சத்திற்கு ஏன் காசோலையை பூர்த்தி செய்து போட்டீர்கள் என்று போன் செய்து பேசிய விபரத்தை பதிவு செய்து வைத்துள்ளார் என்றும் அந்த விபரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு பேசி இருக்க வாய்ப்பு இல்லை.

6. எதிரி எனது வீட்டில் வைத்து இரண்டு 50 ஆயிரம் ரூபாய் கட்டுகள் ரூபாய் ஒரு லட்சம் மட்டுமே வாங்கிச் சென்றார் என்றால் சரியல்ல ஆறு ஐம்பதாயிரம் ரூபாய் கட்டுகள் வாங்கிச் சென்றார். எதிரியிடமிருந்து நான் கொடுத்த ரூபாய் ஒரு லட்சம் பணத்தை திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றும் வழக்கிற்காக மூன்று லட்சம் ரூபாய் பூர்த்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. நான் சொன்ன தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் அவர் சூரிட்டிக்காக கொடுத்த காசோலையை நான் பயன்படுத்திக் கொண்டேன்

என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.02 15:07:10 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**